அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 4/2005

எனது இல தா/7/5/1/100
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
2005 பெப்ரவரி மாதம் ..03.... ஆந் திகதி.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## பிரசவ விடுமுறை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII

பெண் அரச அலுவலர்களுக்கு ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக 84 நாள்கள் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும், 84 நாள்கள் அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும், 84 நாள்கள் சம்பளமற்ற பிரசவ விடுமுறையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XII இன் 18 ஆம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பிரிவு 2005.01.01 திகதி முதல் நடைமுறைப்படும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகிறது.

18. **பிரசவ விடுமுறைகள்**

18.1 நிரந்தர, தற்காலிக, அமய, அல்லது பயிலுநர் பெண் அலுவலர்கள் இப் பிரிவின் கீழ் பிரசவ விடுமுறை பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர்.

18.2 சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்

18.2.1 பெண் அலுவலரொருவருக்கு உயிர்வாழும் ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக முழுச்சம்பளத்துடனான அரசாங்க வேலையாற்று 84 நாள்கள் விடுமுறை பெறுவதற்கு உரித்துண்டு. பிரசவம் நிகழ்ந்து 04 வாரங்கள் செல்லமுன் அலுவலர் மீண்டும் கடமையை பொறுப்பேற்க அனுமதிக்கப்படமாட்டார். இப்பிரிவின் கீழ் விடுமுறை பெறுவதற்காக ஒரு வைத்தியச் சான்றிதழையோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழையோ சமர்ப்பிக்க வேண்டும்.

18.2.2 பிரசவ விடுமுறைகளை கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்கலாகாது.

18.2.3 இவ் விடுமுறைக் காலத்தை அலுவலரின் மீதி விடுமுறைகளிலிருந்து கழித்தல் ஆகாது என்பதுடன், இவ் விடுமுறைக் காலத்தை முழுச்சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

18.2.4 பிறக்கும் போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளைப் பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்லமுன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரணச் சான்றிதழை அல்லது வைத்தியச் சான்றிதழை சமர்ப்பித்த போது விசேட சம்பளத்துடனான

விடுமுறையாக பிள்ளைப் பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 6 வார கால விடுமுறை வழங்க வேண்டும்.

18.3 **அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறை**

18.3.1 மேற்போந்த 18.2.1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி விடுமுறை பெற்றுக் கொண்ட பின் குழந்தையை பாதுகாத்துக் கொள்வதற்காக அரைச் சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறை பெற உரித்துண்டு.

18.3.2 அரைச் சம்பளத்துடனான விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தினங்களை அரைச் சம்பள விடுமுறைகளாகக் கருத வேண்டும்.

18.4 **சம்பளமற்ற பிரசவ விடுமுறைகள்**

18.4.1 மேற்போந்த 18.3.1 உட்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகள் முடிந்த பின் மேலும் குழந்தையை பாதுகாக்கும் அவசியம் ஏற்படும்போது மட்டும் சம்பளமற்ற 84 நாள் விடுமுறை வழங்கலாம்.

18.4.2 இப் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற விடுமுறைகளை கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்திற்குள் வரும் அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்க வேண்டும்.

18.4.3 இந்த விடுமுறைகளை வழங்க முன் அலுவலருக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் அல்லது முற்பணங்களின் மாத தவணைக் கட்டணங்களை தொடர்ந்து அறவிடுவதற்காக திருப்திகரமான ஓர் ஒழுங்கைச் செய்வது திணைக்களத் தலைவரின் பொறுப்பாகும்.

18.5 கருச்சிதைவுக்காக (Abortion & Miscarriage) விடுமுறை அவசியப்படுமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் அலுவலருக்கு உரித்தான ஓய்வு விடுமுறைகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

18.6 18.2.1 உட்பிரிவின் கீழ் பெற்றுக்கொண்ட விடுமுறைக் காலம் முடிவடைந்த பின் 18.3.1 ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளை பெறாவிட்டால் தனது குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுவதற்காக வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் சேவை நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். இவ் அனுமதி வழங்கப்பட வேண்டியது குழந்தையின் வயது 6 (ஆறு) மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டுமாகும்.

18.7 மேலும் பெண் அரச அலுவலரொருவர் கர்ப்பமுற்றிருக்கும் காலம் 5 மாதங்கள் ஆகும் போது கடமைக்காக அரை மணித்தியாலம் தாமதமாகி சேவை நிலையத்திற்கு வருகை தரவும், வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன் புறப்படவும் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை வழங்கப்படுவது அலுவலர் பிரசவ விடுமுறை பெறும்வரை மட்டுமாகும்.

18.8 மேற்போந்த 18.31, 18.4.1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகள் அங்கீகரிக்கப்படுவது குழந்தை உயிர் வாழும் போது மட்டுமாகும். விடுமுறை பெற்றுக்கொள்வது குழந்தையை பாதுகாப்பதற்கானதால் ஏதேனும் காரணமாக குழந்தை மரணித்துவிட்டால் அத்திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு பின் இவ் விடுமுறைகள் செல்லுபடி அற்றதாகும்.

18.9 மேற்போந்த 18.3.1, 18.4.1 பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் விடுமுறைகள் சம்பள ஏற்றங்களுக்கும் ஓய்வூதிய அலுவல்களுக்கும் தடையாக அமைதல் ஆகாது. சம்பளமற்ற விடுமுறைக் காலத்திற்குள் ஏற்படும் வெற்றிடங்களின் போதும் பதவி உயர்வுகளின் போதும் இந்த விடுமுறைக் காலத்தை தடையாக கருதுதலாகாது.

18.10 அலுவலர் மேற்போந்த 18.3.1, 18.4.1 பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளில் ஒரு பகுதியை இரத்துச் செய்து சேவைக்குச் சமூகமளிக்க விரும்பினால் திணைக்களத் தலைவருக்கு அறிவித்து அவ்வாறு செய்யலாம்.

02. இந்தச் சுற்றறிக்கை நடைமுறைக்கு வரும் திகதியன்றுஅரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2004 இன் ஏற்பாடுகளின்படி பெற்றுள்ள சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறையை கடந்து செல்லாத அலுவலர்கள் மட்டும் மேற்போந்த 18.3.1 ஆம் 18.4.1 ஆம் உபபிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்ளலாம். 2005.01.01 ஆம் திகதியன்று சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறையைக் கடந்திருக்கும் அலுவலர்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைச் சிறப்புரிமை பெற உரித்துடையவர்கள் ஆகார்.

**உதாரணம்**:- 2004.12.15 ஆம் திகதியன்று அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 03/2004 இன் ஏற்பாடுகளின்படி சம்பளத்துடனான 84 நாள்கள் விடுமுறைகளை முடிவுறுத்தி உள்ள அலுவலர்களுக்கு இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அரைச் சம்பள, சம்பளமற்ற விடுமுறைகளை வழங்க முடியாது.

03. 2005.01.01 ஆம் திகதி முதல், 1999.07.20 திகதிய 16/99 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும், 2004.08.18 ஆம் திகதிய 03/2004 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும், தற்போது மேற்கொண்டுள்ள செயல் முறைகளை பாதிக்காதவாறு இரத்துச் செய்யப்படுகின்றது.

ஒப்பம்: டி.திசாநாயக்க
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.